(2) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 3-3-1979-ம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள பேரவையின் அலுவல்கள் பற்றிய விவரம் :—

5-3-1979 (திங்கட்கிழமை) 6-3-1979 (செவ்வாய்க்கிழமை) 7-3-1979 (புதன்கிழமை) 8-3-1979 (வியாழக்கிழமை)	1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம்.
9-3-1979 (வெள்ளிக்கிழமை) 10-3-1979 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுதல்.
11-3-1979 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை
12-3-1979 (திங்கட்கிழமை)	1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.
13-3-1979 (செவ்வாய்க்கிழமை)	1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலுரை.
14-3-1979 (புதன்கிழமை) 15-3-1979 (வியாழக்கிழமை) 16-3-1979 (வெள்ளிக்கிழமை)	அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுதல்.

(ஆ) மானியங்களுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு.

மானியக் கோரிக்கைகளின் மேல், வெட்டுத் தீர்மானங்களுக்கு அறிவிப்பு கொடுப்பதற்கு நேரமும், நாளும் நிர்ணயிப்பது குறித்து 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் தேதி நடைபெறும்

1979 மார்ச் 5]

அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்து அறிவிக்கப்படும். மேலும் வெட்டுத் தீர்மானங்களை ஒட்டுமொத்தமாகப் பெறுவதைத் தவிர்ப்பதற்காக, உறுப்பினர்கள் இன்றையிலிருந்தே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்கலாம்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான படிவங்களை சட்ட மன்றப் பேரவை மசோதா பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே ஜட்ஜுகள் எல்லாம் வழக்குகளை நடத்த முடியாத அளவிலே வழக்கறிஞர்கள் எல்லாம் ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார்கள்.....................

(3) தகவல் கோரல்—அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுக்க இருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களைப்பற்றிச் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்னை எழாது. மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருகின்றன. அதுவன்றி ஏதாவது இருந்தால் எழுப்புங்கள். நான் எடுத்துக் கொள்ளவிருப்பதை அறிவிக்கிறேன். அதில் நீங்கள் சொல்ல விரும்புவது இல்லையென்றால் பிறகு எடுத்துச் சொல்லுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி அல்ல நான் சொல்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும் பிறகு எழுப்புங்கள் என்றுதான் சொல்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : என்னுடைய பாயிண்ட் வேறே. 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக, மதுரை திருப்பரங்குன்றம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் 42-ஆவது விதியில் இருப்பதைச் சொல்லிவிடுகிறேன். நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறேன். அதுவன்றி வேறு ஏதாவது இருந்தால் எழுப்புங்கள். முதலில் சிம்கோ பேக்டரியைப் பற்றி எடுக்கிறேன். அடுத்து...............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டால் எது எது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்குப்பிறகு மற்றவைகளை அனுமதிக்கலாம்,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS